

# 1 இனிய தமிழ்ப் பொங்கல்

**படத்தை அவதானிப்போம், கலந்துரையாடுவோம்.**



இந்துப் பண்டிகைகள் பல உள்ளன. அவற்றுள் பொங்கல் விழாவும் ஒன்றாகும். இப்பண்டிகை தை மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. எனவே, இதனைத் தைப்பொங்கல் என்றும் அழைப்பர்.

உழவர்களுக்கு விவசாயம் செய்ய வெயிலும், மழையும் தேவை. இவற்றைத் தருவது சூரியன். ''செய்ந்நன்றி மறவாமை'' தமிழர் பண்பாடு. எனவே, சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகத் தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

அந்த வகையில் தைப் பொங்கல் பற்றிய பாடல் ஒன்றினை நாம் பாடி மகிழ்வோம்.

## செயற்பாடு - 01

★ பாடலை ஆசிரியர் இசையோடு பாடும்போது, செவி மடுங்கள்.

★ குழுநிலையிலும், தனித்தனியாகவும் பாடலைப் பாடுங் கள்.

**தைத்திருநாள் இல்லமெல்லாம்**
**தளிர்த்திடும் தைப்பொங்கல்**
**இத்தனை நாள் காத்திருந்தோம்**
**இனிய தமிழ்ப் பொங்கல்.**



**கூவி அழைத்திடும் சேவல்**
**குதித்தெழுவோம் குளிப்போம்**
**பூவெடுப்போம் புதிதணிவோம்**
**பொங்கலன்று நாங்கள்.**

**கோலமிட்டு விளக்கேற்றி**
**கும்பிடுவாள் அம்மா**
**பாலெடுத்துப் பொங்கலுக்குப்**
**பானை வைப்பார் அப்பா.**

**விரும்பிய மா வாழை பலா**
**விதவிதமாய்க் கனிகள்**
**கரும்பிளனீர் படைத்து மனம்**
**களித்திடுவோம் நாங்கள்.**



வெண்ணிறப்பால் பொங்கி வர
வெடி சுடுவோம் நாங்கள்
இன்னமுதப் பொங்கலுண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்.



கவிஞர் அம்பி

## செயற்பாடு - 02

1. பொங்கல் விழா எந்த மாதத்தில் கொண்டாடப் படுகின்றது?
2. பொங்கலன்று கோலமிடுபவர் யார்?
3. முக்கனிகள் எவை?
4. பொங்கல் விழா ஏன் கொண்டாடப்படுகின்றது?
5. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.

| | | | |
|---|---|---|---|
| அ. | மனம் | ஆ. | களிப்பு |
| இ. | நாள் | ஈ. | பூ |

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| **உழவர்** | - | ගොවියා |
| **விவசாயம்** | - | ගොවිතැන |
| **பண்பாடு** | - | සංස්කෘතිය |
| **செய்ந்நன்றி** | - | කළගුණ සැලකීම |
| **மறவாமை** | - | අමතක නොකිරීම |
| **பண்டிகை** | - | උත්සවය |
| **தைத்திருநாள்** | - | තෛපොංගල් උත්සවය |
| **தளிர்த்திடும்** | - | දලුලන |
| **கூவி** | - | හඬලා |
| **அழைத்திடும்** | - | කතා කරයි |
| **பூவெடுப்போம்** | - | මල් ගනිමු |
| **புதிதணிவோம்** | - | අලුත් ඇඳුම් අඳිමු |
| **கோலமிட்டு** | - | කෝලම් රටා දමා |
| **விளக்கேற்றி** | - | පහන් දල්වා |
| **கரும்பு** | - | උක් ගස් |
| **இளநீர்** | - | කුරුම්බා/තැඹිලි |
| **படைத்து** | - | පූජා කර |
| **களித்திடுவோம்** | - | සතුටු වෙමු |
| **வெண்ணிறப்பால்** | - | සුදු කිරි |
| **பொங்கி வர** | - | උතුරා එන විට |

## செயற்பாடு - 03

★ தைப்பொங்கல் அன்று இந்து இல்லங்களில் இடம்பெறும் நிகழ்வுகளை அட்டவணைப்படுத்துங்கள். அவற்றைத் தொகுத்துக் கூறுங்கள்.

## செயற்பாடு - 04

**பின்வரும் சொற்களை கொண்டு பொங்கல் பற்றி சிறு வாக்கியங்கள் எழுதுங்கள்.**

**சூரியன், இந்துக்கள், தைமாதம், கொண்டாடப்படும், பொங்கல், பண்டிகை, உழவர், கோலம், விவசாயம்.**

## செயற்பாடு - 05

**பின்வரும் உதாரணத்தை அவதானியுங்கள். இடைவெளியை நிரப்புங்கள்.**

**உதாரணம்**

**நான் கொண்டாடுவேன்.**
**நாங்கள் கொண்டாடுவோம்.**

1. நான் கும்பிடுவேன்
   __________ கும்பிடுவோம்.

2. நான் பாடுவேன்.
   நாங்கள் __________

3. நான் குளிப்பேன்.
நாம் ____________

4. நான் குடிப்பேன்.
____________

5. நான் பூ எடுப்பேன்.
____________ பூ எடுப்போம்.

3. நான் புதிய ஆடை அணிவேன்.
____________ அணிவோம்.

## செயற்பாடு - 06

**பின்வரும் சொற்களுக்குச் சமமான கருத்தைத் தரும் சொல்லை பாடத்தில் இருந்து தெரிவு செய்து எழுதுங்கள்.**

மாதா - ____________
பிதா - ____________
பழம் - ____________
உள்ளம் - ____________
மலர் - ____________
வீடு - ____________
சந்தோஷம் - ____________
கதிரவன் - ____________
கலாசாரம் - ____________
தினம் - ____________

பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள்.

| | |
|---|---|
| 1. அம்மா | கும்பிடு**வார்.** |
| 2. தம்பி | கும்பிடு**வான்.** |
| 3. தங்கை | கும்பிடு**வாள்.** |
| 4. உழவர்கள் | கும்பிடு**வார்கள்.** |
| 5. குயில் | கூவு**ம்.** |
| 6. குயில்கள் | கூவி**டும்.** |

## செயற்பாடு - 07

**பின்வரும் வாக்கியங்களை முழுமைப்படுத்துங்கள்.**

**உதாரணம்:** **சாப்பிடு**

| | |
|---|---|
| 1. அம்மா | சாப்பிடுவார். |
| 2. தம்பி | ______________________ |
| 3. தங்கை | ______________________ |
| 4. உழவர் | ______________________ |
| 5. குயில் | ______________________ |
| 6. குயில்கள் | ______________________ |